**தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால், மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) சிறைச்சாலைகள் திணைக்களம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அவசியம் இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், அத்தேவைகளிலிருந்து விலகிய இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 31,098,930 மற்றும் அத்தினத்தில் காசேட்டில் உள்ளவாறு திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய மீதியாகிய ரூபா 462,481 என்பவற்றிற்கான கணக்கிணக்கத்திற்கு குறித்த சுற்றறிக்கையின் 7(vi) க்கமைய தயாரிக்கப்பட வேண்டிய கட்டு நிதிக் கணக்கிணக்கக் கூற்றுக் கணக்கு பிழையின்றித் தயாரிக்கப்படவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | கட்டு நிதிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கையில் வரவு மற்றும் செலவு மீதிகளை உள்ளடக்குவதில் வழுக்கள் நிலவியமையை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | மீண்டுவரும் செலவின விடயங்கள் 10 க்கிடையே நிதிப் பிரமாணங்கள் 66 மற்றும் 69 இன் கீழ் மாற்றஞ் செய்யப்பட்ட ரூபா 178,550,000 மற்றும் 09 மூலதன செலவின | - மேற்படி - | மாற்றத்திற்குள்ளான தொகை சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் ஏசீஏ-02 மாதிரிப் படிவத்தில் உள்ளடக்கப்படவில்லை எனும் |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களுக்கிடையே மாற்றஞ் செய்யப்பட்ட ரூபா 78,375,000 நிதியேற்பாடானது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் அறிமுகஞ் செய்யப்பட்ட ஏசீஏ-2(i) மாதிரிப் படிவத்தில் உள்ளடக்கப்படவில்லை. | | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (இ) | குறித்த சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிசார்பற்ற சொத்துக்களை அறிக்கையிடும்போது, அச் சொத்துக்களது பிரதான பேரேட்டு மீதிப் பெறுமதி தனிப்பட்ட சொத்துக்களது பெறுமதியுடன் பரிசீலிக்கப்பட்டு அதனைக் கணக்கிணக்கம் செய்ததாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். எனினும், திணைக்களத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார்பற்ற சொத்துப் பேரேட்டு மீதி பூச்சியமாக உள்ளதாக அரசாங்கக் கணக்குத் திணைக்களம் அறிவித்துள்ளமையால் சுற்றறிக்கைப் பிரகாரம் நிதிசார்பற்ற சொத்துக்களின் மீதி கணக்கிணக்கம் செய்யப்பட்டதா என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், நிதிசார்பற்ற சொத்துக் கூற்றில் சுட்டிக் காட்டப்பட்ட நிதிசார்பற்ற சொத்துக்களுக்கான ரூபா 8,475,769,546 சரியானதா என்பதைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியாதிருந்தது. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அச்சொத்துக்களது பெறுமதி மோட்டார் வாகனங்கள் மற்றும் காணிகளது பெறுமதி குறைவடைவதுடன் அச்சொத்துக்களது பெறுமதி அடங்கலாக முற்றான சொத்துப் பதிவேடொன்று தற்போது தயாரிக்கப்பட்டவாறுள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றின் நியாயமான பெறுமதி விசுவாசமாக அளவிடப்படக் கூடியவிடத்து அவற்றை மீளப் பெறுமதியிடல் விலையில் அறிக்கையிட வேண்டும். அதற்கமைய, சொத்துக்கள், பொறித்தொகுதி, இயந்திர சாதனங்களது நியாயமான | சொத்துக்கள் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். | சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள இயந்திர சாதனங்கள் மிகவும் பழைமை வாய்ந்தவையாதலாலும் அவை தற்போது சந்தையில் கிடைப்பதற்கில்லாததாலும் அவற்றின் சந்தை விலையை நிர்ணயிக்க முடியவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி குறிப்பிடத்தக்க அளவில் விரைவில் மாற்றமடையக் கூடும் என்பதால் 03 அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை அவை மீளப் பெறுமதியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், தொழில்நுட்ப மற்றும் விவசாயத் துறை முற்பணக் கணக்குடன் தொடர்புடைய சில இயந்திர சாதனங்களும் பொறித் தொகுதியும் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதலாக 25 க்கும் 93 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளாக நெடுங்காலத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தன. அதற்கமைய, இயந்திர சாதனங்களைத் தேய்மானமிடும் போது பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பாக சரிவர மதிப்பீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான இயந்திர சாதனங்களது நியாயமான பெறுமதி நிரூபணமாகவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முற்பணக் கணக்குடன் தொடர்புடைய 75 ஆண்டுகள் பழமை வாய்ந்த ரூபா 95,100 கிரயமுடைய 21 இயந்திர சாதனங்களும் 50 முதல் 75 ஆண்டுகளாக உள்ள ரூபா 216,630 கிரயமுடைய 33 இயந்திர சாதனங்களும் 25 முதல் 50 ஆண்டுகளாக உள்ள ரூபா 315,514 கிரயமுடைய 42 இயந்திர சாதனங்களும் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆகவே, இயந்திர சாதனங்களது தேய்மானத்தின்போது பயனுள்ள ஆயுட்காலம் தவறின்றி மதிப்பீடு செய்யப்படாதிருப்பதும் அதன் விளைவாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இயந்திர சாதனங்களது நியாயமான விலை நிரூபணமாகாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | இயந்திர சாதனங்களது ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டு நியாயமான பெறுமதி நிரூபணமாக வேண்டும். | சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ள இயந்திர சாதனங்கள் மிகவும் பழமை வாய்ந்தவனவாதலாலும் அவை தற்சமயம் விற்பனைச் சந்தையில் இல்லாததாலும் அவற்றின் விற்பனைச் சந்தைப் பெறுமதியை நிர்ணயிக்க முடியாதுள்ளது. |
| (இ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 50,383,707 ஆகும். இதில் அரச துறையைச் சார்ந்த ரூபா 50,348,089 கடன்பட்டோர் மீதிகள் உள்ளடங்கியிருந்தன. தனியார் துறை | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கடனை அறவிடுவதற்கு நியமிக்கப்பட்ட குழுவைப் போன்றதொரு குழு நியமிக்கப்பட்டோ அல்லது | தற்சமயம் நியமிக்கப்பட்டுள்ள குழுவினது அறிவுறுத்தல்களுக்கமைய இவ்விலைப் பட்டியல்களைத் தீர்வு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கடன்பட்டோர் மீதி ரூபா 35,618 ஆகும். அம்மீதிகளில் உள்ளடங்கிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 9,876,027, 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டதும் 10 ஆண்டுகளுக்குக் குறைவானதுமான ரூபா 13,192,402, ஓராண்டிற்கு மேற்பட்டதும் 5 ஆண்டுகளுக்குக் குறைவானதுமான ரூபா 12,868,859 கடன் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கடன் நிலுவையை அறவிடுவதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டு 09 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டிருந்தும் 2019 மே 24 இல் உள்ளவாறு மேலும் தீர்வு செய்யப்பட வேண்டிய 463 விலைப் பட்டியல்களுக்குரிய ரூபா 31,846,100 இருந்தமையால் கடனை அறவிடுவதில் மந்த நிலை தென்பட்டது. | வேறு பொருத்தமான நடவடிக்கைகளின் மூலமோ 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னரான கடனை அறவிடுவதில் ஈடுபட வேண்டும். | எடுக்கப்பட்டவாறுள்ளது. |

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவு செவ்வையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| **அவதானிப்பு** | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) 1877 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 107 ஆம் பந்தி | சிறைச்சாலை நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின்போது உத்தியோகத்தர்களது பொறுப்பில் ஒப்படைக்கப்படும் சிறையில் அடைக்கப்படும் சந்தேக நபர்களுக்குரிய 03 அல்லது அதற்குக் குறைவான காலமாக திருப்பி ஒப்படைக்கப் படாதிருக்கும் ரூபா 538,852 மற்றும் தங்க ஆபரணங்கள் போன்ற பிரத்தியேக சொத்துக்கள் என்பவற்றை இலகுவாக | சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறித்த உத்தயோகத்தர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணக் கூடியவாறு வெவ்வேறாக அவை பொதி செய்யப்படாதிருந்தன. அவ்வாறே, அப்பொதிகளில் கைதிகளின் / சந்தேக நபர்களின் பெயர் மற்றும் பதிவு இலக்கம் என்பன அடங்கிய லேபல் இடப்பட்டு அவற்றில் முத்திரை பொறிக்கப்பட்டு ஜெயிலரின் பொறுப்பில் இரும்புப் பெட்டகத்தில் வைத்திருக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை | | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>---------------------------------- | | | |
| (i) XIX அத்தியாயத்தின் 6.4 ஆம் பிரிவு | அத்தியட்சகரது பணிப்புரைக்கமைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ மனைகளில் 02 மனைகளை அவ்வுத்தியோகத்தர்கள் வேறு உத்தியோகத்தர்களுக்கு வாடகைக்கு வழங்கியிருந்தனர். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | முறையான பரிசீலனையை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ii) XIX அத்தியாயத்தின் 6.14, 6.14.1, 7.2 ஆம் பிரிவுகள் | வேலை இட மாற்றம் அல்லது குத்தகைக் கால வரம்பு அதிகரித்தல் காரணமாக மனை ஒன்றில் வசிப்பதற்கான தகைமை இல்லாதொழிந்தும் உத்தியோகபூர்வ மனைகளில் தொடர்ந்தும் வசித்தவாறிருக்கும் 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப்பண வாடகையாகிய ரூபா 2,666,304 அறவிடப்படவில்லை. | - மேற்படி - | தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தினது 6.14 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>-----------------------------------<br>நிதிப்பிரமாணம் 215 | குறுவிட்ட சிறைச்சாலையில் பொருட்களைப் பெறுவதற்கு முன்னரே அவற்றிற்குரிய மொத்தத் தொகையான ரூபா 2,009,880 தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. 02 பஸ் வண்டிகளைப் பழுதுபார்ப்பதற்கு முன்னரே பழுதுபார்த்தல் கட்டணமாக ரூபா 481,475 வழங்கப்பட்டிருந்தது. மேலும், அவற்றுக்குரிய கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைத் தயாரிக்கையில் நிதிப் பிரமாணங்கள் 136, 137, 138, 139 கடைப்பிடிக்கப் படாதிருந்தன. | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிகப்பை ஏற்றுக் கொள்கின்றோம். நிதிப் பிரமாண மீறல்கள் தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் களை எச்சரித்து இனிமேல் அவ்வாறு நடைபெறாது இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதிசார் மீளாய்வு**
------------------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**
---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவின விடயம் 1203 இன் கீழ் உணவு, பானங்கள் மற்றும் சீருடை என்பவற்றிற்கான குறை நிரப்பு நிதியேற்பாட்டு ரூபா 80 மில்லியனாகும். இதில் 60 சதவீதமான ரூபா 48.26 மில்லியன் சேமிப்புக்குள்ளானது. | நிதிப்பிரமாணம் 50 க்கமைய பிழையற்ற செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | விலைப்பட்டியலைச் செலுத்துவதற்குப் போதியளவு கட்டு நிதி வழங்கப்படாமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |
| (ஆ) | மீண்டுவரும் 08 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 436 மில்லியன் மதிப்பீட்டிலும் கூடுதலாக, பொறுப்புகளும் உள்ளடங்கலாக, ரூபா 87.56 மில்லியன் செலவு ஏற்பட்டுள்ளமையும் | - மேற்படி - | அரச சேவையின் சம்பள மீளாய்வு, அதனையடுத்து மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு உயர்வடைதல், சீவனப்படி உயர்வடைதல், திறைசேரியால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகையில் |

| | | | |
|---|---|---|---|
| | இச்செலவின விடயங்களுக்கிடையே 66, 69 ஆம் நிதிப் பிரமாணங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 44.3 மில்லியன் நிதியானது மாற்றம் செய்யப்பட்டுள்ளமையும் காரணமாக மதிப்பீடானது சாத்தியமானவாறு தயாரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | குறித்த வரம்புகளைக் குறைத்தவாறு நிதி ஏற்பாடு செய்யப்படுதல் என்பன இதற்கான காரணங்களாகும். |
| (இ) | மூன்று சிறைச்சாலை நிறுவனங்களை நிர்மாணிப்பதற்கு 2104 செலவின விடயத்தின் கீழ் ரூபா 710 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் ரூபா 38.5 மில்லியன் மூலதன நிதியேற்பாடானது வேறு செலவின விடயங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்ததுடன், மாற்றம் செய்யப்பட்ட அந்நிதி உள்ளடங்கலாக 61 சதவீதமான ரூபா 435.28 மில்லியன் குறித்த நோக்கத்திற்குச் செலவிடப்படவில்லை. மாற்றஞ் செய்யப்பட்ட நிதி உள்ளடங்கலாக அந்த ஒவ்வொரு செலவின விடயத்தினதும் சேமிப்பு 51 முதல் 73 சதவீதமாக அமைந்திருந்தது. | - மேற்படி - | அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றோம். ஆண்டின்போது கிரமமாக கட்டு நிதி கிடைக்கப் பெறாமையால் நிர்மாண வேலைக் கம்பனி எதிர்பார்த்த பௌதீக செயலாற்றல் மட்டத்தை அடைய முடியவில்லை. அதனால் நிதிசார் செயலாற்றலை அடைய முடியாது ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |
| (ஈ) | பொருட் கொள்வனவு நடைமுறைகளில் ஏற்பட்ட தாமதம், நலிவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் பொருட் கொள்வனவுகளைத் திட்டமிடல் போன்ற காரணங்களால் மூலதனச் சொத்துக்களைப் பெறுவதற்கு 02 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 96.6 மில்லியனின் 45 சதவீதமான ரூபா 43.79 மில்லியன் குறைந்த பயன்பாட்டிற்குள்ளானது. அந்த ஒவ்வொரு செலவின விடயத்திற்குமென ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் முறையே 46 சதவீதம் மற்றும் 43 சதவீதம் சேமிப்புக்குள்ளானது. | நிதிப்பிரமாணம் 50 க்கமைய பிழையற்ற செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பொருட் கொள்வனவு முறையாகச் செயற்படுத்தப்பட வேண்டும். | பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதத்தாலும் தொழில்நுட்பச் சபையினரால் குறித்த கொள்வனவு இடை நிறுத்தம் செய்யப்பட்டதன் காரணமாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை எதிர்பார்த்தவாறு பயன்படுத்த முடியாது போனது. |
| (உ) | மதிப்பீட்டில் நிதியேற்பாடு இல்லாத மன்னார் சிறைக்கூட நிர்மாண வேலைக்கு நிதிப்பிரமாணங்கள் 66, 69 என்பவற்றின் மூலம் 2104(9) ஆம் இலக்க செலவின விடயத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட ரூபா 26.5 மில்லியன் முற்றாகச் சேமிப்புக்குள்ளானது. | நிதியேற்பாடானது திட்டமிடப்பட்டு மாற்றஞ் செய்யப்பட வேண்டும். | தொல்பொருளியல் திணைக்களம் குறித்த காணி தொல்பொருளியல் பெறுமதி மிக்கதெனக் குறிப்பிட்டமையால் நிர்மாண வேலை இடை நிறுத்தப்பட்டது. ஆகவே, ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்த முடியவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மூலதன செலவின விடயங்களின் 02 இன் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 30 மில்லியனையுடைய மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டை அதிகரித்தவாறு, பொறுப்பும் உள்ளடங்கலாக ரூபா 15.68 மில்லியன் செலவு ஏற்பட்டமையாலும் இவ்விரண்டு செலவின விடயங்களுக்கும் 66 ஆம் 69 ஆம் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் ரூபா 14.5 மில்லியன் மாற்றம் செய்யப்பட்டமையாலும் மதிப்பீடு சாத்தியமானவாறு தயாரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 க்கமைய பிழையற்ற செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | நகர்ப்புற சிறைச்சாலை நிறுவனங்களில் நெருக்கடியைக் குறைத்துக் கொள்ளும் நோக்குடனும் போகம்பரை சிறைச்சாலையில் இருந்த சிறை உணவு தயாரிக்கும் பொய்லர் இயந்திரங்களது புனரமைப்பு காரணமாகவும் நிதிப்பிரமாணம் 66 இன் படி தேவையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டது. |
| (எ) | விசேட தரத்திலான மற்றும் சந்தேக நபர்களைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 9mm வகையைச் சேர்ந்த 120 பிஸ்டல்களைக் கொள்வனவு செய்வதற்கு 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளின்போது ரூபா 10,884,368 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. 179 பதவிகளில் நிலவும் வெற்றிடங்களைத் தவிர, சுடுகலன்கள் வழங்கப்படுவதற்கு அருகதையுள்ள 458 உத்தியோகத்தர்கள் சேவையில் உள்ளபோதும் இந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படக்கூடிய 136 சுடுநலன்கள் மாத்திரமே திணைக்களத்திடம் உள்ளதுடன் அவற்றுள் 38 பயன்படுத்தப்பட முடியாத நிலையிலும் உள்ளன. கடற்படையின் வணிகமய வெடிப்பொருள், சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்போது குறித்த நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளாமை மற்றும் தற்போதைய நிலைமைக்குப் பொருத்தமானவாறான நவீன உபகரணங்கள் தொடர்பாக ஆராய்ந்து அதற்கமைய மாதிரி வடிவங்களைச் சமர்ப்பிக்காமையால் 03 ஆண்டுகளாக சுடுகலன்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தி சுடுகலன்கள் கொள்வனவு செய்யப்படாதிருந்தன. | சேவையின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கும் முகாமைத்துவத்தின் உயர் மட்டம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | ஏற்பட்ட தாமதம் தொடர்பாக 2019 பெப்பரவரி 27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2 வைப்பு மீதிகள்**

திணைக்களத்தின் 08 பொது வைப்புக் கணக்குகளில் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 112 மில்லியனாகும். அது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு கணக்குகளுக்குரிய 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 199,880 வைப்புகள் சம்பந்தமாகப் நிதிப்பிரமாணம் 571 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 571 க்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களது சம்பளத்தில் அறவிடப்பட்டுள்ள இந்த பிணை வைப்புகளை உத்தியோகத்தர்களின் பெயர்களினாலான கணக்குகளை ஆரம்பித்து வைப்பில் இடப்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சிறைக் கைதிகளது பிரத்தியேக வங்கிக் கணக்குகளில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சிறை வேதனம் மற்றும் பிரத்தியேகத் தொகைக் கணக்கில் 2018 செப்டெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4.18 மில்லியன் மீதி இருந்தது. விடுதலையாகிய சில சிறைக் கைதிகளது சிறை வேதனம் கொடுப்பனவு செய்யப்படாமை மற்றும் சில சிறைக் கைதிகளுக்கு கணக்குகள் ஆரம்பிக்கப்படாமை என்பன இதற்கான காரணமாகும். | - மேற்படி - | சிறை வேதனம் மற்றும் பிரத்தியேக தொகை கணக்கில் மீதி இருப்பதை ஏற்றுக்கொள்வதுடன், அநேக கைதிகளிடம் அடையாள அட்டைகள் இல்லாமையால் வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதற்கு இயலாதுள்ளது. |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று**

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்றில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி தொடர்பாகப் பின்வரும் குறைபாடுகள் வெளியாகின.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கைப் பிரகாரம் வேலை இட மாற்றம் வழங்கப்பட்ட 03 மாதங்களுக்குள் கடன் மீதி தீர்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், வேலை இட மாற்றத்திற்குள்ளான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 186,136 மீதி இருந்ததுடன் அதில் ரூபா 92,059 நான்கு ஆண்டுகளைக் கடந்ததாகும். | சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்துரை முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் | வேலை இட மாற்றத்திற்குள்ளான உத்தியோகத்தர்களது தகவல்களை அறிந்து கொள்வது வசதியற்றதாக உள்ளதால் கடனை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பொது நிர்வாக திணைக்களத்தினது உதவியுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடி விரைவாகத் தீர்வு காணுமாறு அறிவுறுத்துரை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வேலையை விட்டு விலகிய 96 உத்தியோகத்தர்கள், வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட 68 உத்தியோகத்தர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்ட 19 உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7.07 மில்லியன் மற்றும் ஓய்வு பெற்ற, இறப்புக்குள்ளான 140 உத்தியோகத்தர்களிடமிருந்து வருமதியாகவுள்ள ரூபா 4.85 மில்லியன், மற்றும் வத்துபிட்டிவல சிறைச்சாலை மூடப்பட்டதையடுத்து அங்கிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 168,183 மீதி என்பன அறவிடப்படாதிருந்தன. இம்மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகள் ரூபா 3.98 மில்லியனாகும். | நிலுவையாக உள்ள கடன் மீதியை அறவிடுவதற்குத் தேவையான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸ் என்பவற்றின் மூலம் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வேலை இடைநிறுத்தத்துக்கு உள்ளான உத்தியோகத்தர்களது ஒழுக்காற்று விசாரணை நடைபெறுகின்றது. இவ்வாண்டில் எஞ்சிய கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பழைய கடன் மீதிகளது தகவல்களைக் கண்டறிய முடியாதுள்ளமை, கடன் மீதியைக் குறைவாக அறிவித்திருந்தமை, நிதியேற்பாடு செய்யப்பட்டபோது கணக்கிலிடப்படாமை, இறப்பு பணிக்கொடை கோரிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, மூடப்பட்ட சிறைச்சாலையின் கடன் மீதிகள் மாற்றம் செய்யப்படாமை போன்ற காரணங்களால் இக்கடன்களை அறவிடமுடியாது போனதுடன், அவ்விபரங்களும் தகவல்களும் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (இ) | கடனை அறவிடுகையில் 11 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 114,402 கூடுதலாக அறவிடப்பட்டிருந்தது. 2008 டிசெம்பர் 31 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 30/2008 ஏற்பாடுகளுக்கமைய நடவாமையால் அதி கூடிய கடன் வரம்பாகிய ரூபா 250,000 க்கு அதிகமாக 08 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மீதிக்குரிய தொகை மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2.11 மில்லியன் ஆகவிருந்தது. | 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அறிவுறுத்துரைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | கூடுதலாக அவதானிக்கப்பட்ட தொகைக்குரிய உத்தியோகத்தர்களது தகவல்களை அறிந்து அவற்றை மீளளிப்புச் செய்வதற்கும் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டவற்றை அறவிடுவதற்கும் இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாதவாறு தவிர்த்துக் கொள்வதற்கும் அத்தியட்சகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 2.4 பொறுப்புகளும் கடப்பாடுகளும் ஏற்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,170.78 மில்லியன் பெறுமதியான 2,306 பொறுப்புகளும் கடப்பாடுகளும் ஏற்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணத்தின் குறித்த ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 91 குறிப்பிடும் ஏற்பாடுகளுக்கு முரணாக 06 செலவின விடயங்களில் ரூபா 1.65 மில்லியன் சேமிப்பிலும் கூடிய ரூபா 44.66 மில்லியன் பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன. அங்கீகாரமற்ற நிதியேற்பாட்டிலும் கூடிய செலவினமாக அது அவதானிக்கப்பட்டது. | வேண்டும். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 போதியளவு நிறைவேறாத பணிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இளம் குற்றவாளிகள் (பயிற்சிக் கற்கைநெறி) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இளம் குற்றவாளிகளை பயிற்சி வித்தியாலயத்தில் இணைத்துக் கொள்ளும்போது குறித்த அறிக்கைகள் இல்லாது பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக இப்பாடசாலையில் கல்வி வழங்குவதற்கு யோக்கியதை அற்ற மற்றும் ஆரம்பத் தகைமைகள் அற்ற பிள்ளைகள் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டமை, பிள்ளைகளின் வயதுக்கும் கல்வி மட்டத்திற்கும் ஏற்றவாறு பாடசாலைக் கல்வி திட்டமிடப்படாமை, கல்வி வழங்குவதற்கு முன்னரோ இல்லது வழங்கப்பட்டவாறு இருக்கையிலோ பல்வேறு தவறான செயல்களால் குற்றமிழைத்தவர்களாகிய இப்பிள்ளைகள் வெற்றிகரமான புனர்வாழ்வுக்குட்படுத்தப்படாமை, இப்பிள்ளைகள் கூடியளவு விரும்பும் தொழில்சார் பயிற்சியை வழங்குவதற்குக் கவனம் செலுத்தாமை, போதியளவு இட வசதியின்றி பிள்ளைகளை வைத்திருத்தல் போன்ற காரணங்களால் வெற்றியளிக்காத நடைமுறைகளின் கீழ் சிறைச்சாலைப் பாடசாலைகள் செயற்பட்டிருந்தன. அநேக பிள்ளைகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டபோதும், பிள்ளைகள் அதனை விரும்பாது இருப்பதும் பாடசாலையில் கல்வி கற்கும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டிராததுடன் சிறைச்சாலை பாடசாலைகளது நிர்வாக நடவடிக்கைகள் | நோக்கங்களை நிறைவேற்றுவதில் அதி சிறந்த மட்டம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | குற்றவியல் கோவை அதிகாரச்சட்டத்தின் 35 க்கமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மஜிஸ்டிரேட்களுக்கு உணர்த்துமாறு நீதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. யோக்கியதையைக் கருத்திற் கொண்டு தண்டனை வழங்குவதற்கான படிவத்தை உபயோகிக்குமாறும் பிள்ளைகளுக்கு தொழில்சார் பயிற்சியை வழங்குவதற்கு குறித்த நிறுவனங்களுடன் இணைந்து விதிமுறைகளைத் தயாரிக்குமாறும் கலந்துரையாடப்பட்டுள்ளது. சிறைச்சாலைத் திணைக்களத்தின் தலையீடு சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கான விதிமுறைகளைத் தொடங்கும் நடவடிக்கைகள் கலந்துரையாடப்படுகின்றது. |

கல்வி அமைச்சு மற்றும் சிறைச்சாலைத் திணைக்களம் என்பவற்றின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்றிராததும் அவதானிக்கப்பட்டது.

சிறைச்சாலை பாடசாலையுடன் கூடிய வடரெக்க சிறைச்சாலை முகாமைச் சுற்றிவர பாதுகாப்பு வேலி அல்லது மதில் நிர்மாணிக்கப்பட்டிராமை, தொற்று நோய்கள் ஏற்படுமிடத்து நோயாளிகளை வேறாக வைத்திருப்பதற்கு வசதி இல்லாமை, இருதயத் துடிப்பு மற்றும் குருதி அழுத்தம் என்பவற்றை அளவிடுவதற்கான நவீன சுகாதார உபகரணங்கள் இல்லாமை, தாதியர்களதும், மருந்தாளர்களதும் பற்றாக்குறை, உத்தியோகத்தர் ஒருவர் விடுமுறையில் செல்வதாயின் அவரது கடமையை ஆற்றுவதற்கு வேறொருவர் இல்லாமை போன்ற சுகாதார வசதிகளும் மிகவும் குறைந்த மட்டத்திலேயே இருந்தன.

சிறைச்சாலைகள் நிலையியற் கட்டளை 962 க்கமைய விடுதிக்குப் பொறுப்பானவரின் கீழ் இளம் குற்றவாளிகளை முதலாம் ஆண்டில் முதலாவது விடுதியிலும் இரண்டாவது ஆண்டில் இரண்டாவது விடுதியிலும் மூன்றாவது ஆண்டில் மூன்றாவது விடுதியிலும் வைத்திருக்க வேண்டுமாயினும், தற்சமயம் அவ்விதிமுறைகள் அமுலாகவில்லை.

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 07 ஆண்டுகள் நிறைவேறியுள்ள மற்றும் ஏறக்குறைய ரூபா 101 மில்லியன் செலவு செய்யப்பட்டுமுள்ள சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்துவதற்கு வெலிக்கடை சிறைச்சாலையை இணையத்தளப்படுத்தும் பணி 2016 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திற்கு ரூபா 957,978 க்கு வழங்கப்பட்டிருந்தது. 12 சிறைச்சாலை நிறுவனங்களை இணையத்தளப்படுத்துவதற்கான பணி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 2018 ஆம் | ஒரே பொருட் கொள்வனவை ஒரே தடவையில் மேற்கொள்வதன் மூலம் செலவைக் குறைப்பதுடன், விளைவுகளைக் குறைத்துக் கொள்வதற்கும் பராமரிப்பு மற்றும் வழங்கல்களுக்கு தீர்வு காண்பதில் வினைத்திறன் நிலவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தகவல் முறைமையைத் துரிதமாக சகல | நிதியேற்பாடில்லாமையால் சகல சிறைச்சாலை நிறுவனங்களையும் ஒரே தடவையில் இணையத்தளப்படுத்த முடியாததுடன், நிதியேற்பாடு செய்யப்படின் எஞ்சிய 16 சிறைச்சாலை நிறுவனங்களையும் எதிர்காலத்தில் இணையத்தளப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. |

ஆண்டில் ரூபா 30.51 மில்லியனுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 16 நிறுவனங்கள் எதிர்காலத்தில் இணையத்தளப்படுத்தப்படவுள்ளன. சகல நிறுவனங்களையும் ஒரே சமயத்தில் இணையத்தளப்படுத்தி அப்பொறுப்பையும் ஏற்படக்கூடிய விளைவுகளையும் ஒரே நிறுவனத்திடம் வழங்குவதன் மூலம் தகவல் முறைமையை சகல நிறுவனங்களிலும் அமுலாக்குவதற்கும் கிரயத்தைக் குறைப்பதைப் போன்றே முறைமையை அமுலாக்குவதால் ஏற்படும் விளைவுகளை குறைத்துக் கொள்வதிலும் கவனம் செலுத்தப்படவில்லை. தகவல் முறைமை சகல நிறுவனங்களிலும் அமுல்படுத்தப்படாததால் சிறைச்சாலை மாற்றம் போன்ற சில பிரிவுகள் செயற்பட்டபோதும், எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கப்பெறவில்லை.

நிறுவனங்களிலும் அமுல்படுத்தி எதிர்பார்த்த பெறுபேற்றை அடைய வேண்டும்.

### 3.3 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதியன்று ரூபா 30,519,301 செலவழித்து 12 சிறைச்சாலை நிறுவனங்களில் கணனி இணையதளங்களை நிறுவுதல், தயார்படுத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான பொருட் கொள்வனவுப் பணிகளுக்கு மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.3 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் பொருட் கொள்வனவு நிறுவனத்தால் அந்தக் கேள்வியாளருக்கு உடனேயே முறையான ஏற்றுக் கொள்ளல் கடிதம் வழங்கப்பட வேண்டுமாயினும், 12 சிறைச்சாலை நிறுவனங்களை இணையதளப்படுத்துகையில் கணனி இணையதளப்படுத்தல், உபகரணங்களை வழங்குதல், பொருத்துதல், தயார்படுத்தல் என்பவற்றிற்கு மாத்திரம் 2018 ஒக்டோபர் 15 ஆந் திகதியன்று தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளைக் கடைப்பிடித்து பொருட்களின் வகைகளைத் தெரிவு செய்து, | பொருட் கொள்வனவு வழிகாட்டி ஏற்பாடுகளுக்கு அனுசரணையாக மொத்தக் கிரய மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டும். பொருள் வகைகளை சரிவரத் தெரிவு செய்து உடன்படிக்கை செய்யப்பட வேண்டும். | ஒவ்வொரு துணைப்பாகத்திற்குமான மாதிரி வடிவத்தின் பராமரிப்பும் பொறுப்பும் நிபந்தனைகளும் வெவ்வேறாகக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுடன் இணங்குவதாக கேள்வியாளர்கள் தமது கேள்விகளைச் சமர்ப்பித்தபோது குறிப்பிடப்பட்டிருந்தனர். |

| | | | |
|---|---|---|---|
| | சேவை உடன்படிக்கைகளில் ஈடுபடக்கூடியவாறு பொருட் கொள்வனவு உடன்படிக்கை செய்யப்படவில்லை. | | |
| (ஆ) | சகல நிறுவனங்களிலும் தேவைகளைக் கருத்திற் கொண்டு அவற்றை வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கி ஒருமுகப்படுத்தியவாறான பொருட் கொள்வனவின் மூலம் பெறப்பட வேண்டிய குளிரூட்டிகள், தொலைக்காட்சி இயந்திரங்கள், மேசைகள், நாற்காலிகள் போன்ற உபகரணங்களைப் போன்றே நபர்களைப் பரிசோதிக்கும் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்குக் கூறுவிலைகளைக் கோருதல், பரிசீலித்தல், அங்கீகாரத்திற்கு அனுப்பி வைத்தல், உறுதிச் சான்றுகளைத் தயாரித்தல், போன்ற பணிகள் சிறைச்சாலை நிறுவனங்களில் களஞ்சியப் பொறுப்பாளர் அடங்கலாக உத்தியோகத்தர்களால் அவர்களது விடயங்களுக்கு அப்பாற்றப்பட்ட விதத்தில் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் இருந்தன. 2019 ஏப்ரல் 29 ஆந் திகதியன்று ரூபா 107,525 க்கு குளிரூட்டி ஒன்றைக் கொள்வனவு செய்தமை மற்றும் 2018 மார்ச் 28 ஆந் திகதி ரூபா 62,675 செலவில நபர்களை பரிசோதிக்கும் இயந்திரத்தைப் பழுதுபார்த்தமை என்பன இம்முறையற்ற பொருட் கொள்வனவு விதிமுறைகளினால் ஏற்பட்டனவாகும். அவற்றிற்குச் சிறைச்சாலை அத்தியட்சகரது அதிகார ஒப்படைப்பும் இருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் 135 ஆம் நிதிப்பிரமாணத்தின் கீழான அதிகார ஒப்படைப்பின் பிரகாரம் சிறைச்சாலை அத்தியட்சகர் ஒருவர் ரூபா 50,000 வரையான பொருட் கொள்வனவை மேற்கொள்ளலாம். |

### 3.4 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் 21 வாகனங்களும் பயன்படுத்த முடியாத 32 வாகனங்களும் திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்படாதிருந்தன. 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை அறிவுறுத்துரைகள் கடைப்பிடிக்கப்படாமையால் 2019 சனவரி மாதமளவில் 03 மாதங்களுக்குள் முதல் 09 ஆண்டுகளாகச் செயற்படாதிருந்த போதும், பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளில் | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை அறிவுறுத்துரையின்படி நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் வாகனப் பரிசோதனைக் குழுவால் வழங்கப்படும் அறிவுறுத்தலின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஒட்டுமொத்த வாகனங்கள் தொடர்பான நிர்வாகத்தை அத்தியட்சகர் ஒருவரிடம் ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்படாததால் இயற்கை இடர்களுக்குள்ளாகி 43 வாகனங்கள் அழிவடைந்தவாறிருந்தன. அவ்வாறே, 16 வாகனங்கள் கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்குப் பொருத்தமானவை எனத் தீர்மானிக்கப்பட்டபோதும், அவ்வாறு தீர்மானித்து 01 முதல் 03 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் கைதவரிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் இன்றி இருந்தன. 53 வாகனங்களுக்கு வாகனப் பதிவுச் சான்றிதழ்கள், காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் இல்லாமையால் அவற்றைத் திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்திருக்கவில்லை என்றும் அவற்றுள் 08 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இலக்கம் இன்றி இருந்ததுடன் அவை பெறப்பட்ட வாகனங்கள் அல்ல எனவும் அவதானிக்கப்பட்டன. | | |
| (ஆ) | 33 ஏக்கர், 1 றூட், 11 பர்ச்சர்ஸ் உடைய அத்தனபொலவத்தை எனும் வட்டரெக்க திறந்த சிறைச்சாலை அமைந்துள்ள காணி 2018 டிசெம்பர் 07 ஆந் திகதியளவிலும் திணைக்களத்தால் சுவீகரிக்கப்படாதிருந்தது. | சொத்துக்களின் உரித்தை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.5 நட்டங்களும் இழப்புகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 110 குறிப்பிடும் ஏற்பாடுகளிலுள்ள மாதிரிப் படிவத்தின்படி பேணப்படும் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டில் 203 நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ரூபா 55.79 மில்லியன் கூட்டுத்தொகையுடைய நட்டங்கள் தொடர்பான விபரம் முறையாக அறிக்கையிடப்படவில்லை. | 110 ஆம் நிதிப் பிரமாணம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | மூலத் தகவல்கள், குறித்த நிறுவனங்களில் உள்ளதால் ஆரம்ப நடவடிக்கைகள், அந்நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் 05 வாகன விபத்துக்கள் அடங்கலாக 06 வாகன விபத்துக்கள் இடம்பெற்றிருந்தன. | நிதிப்பிரமாணத்தில் உள்ள ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்பட | இவ்விபத்துக்கள் நிறுவன அத்தியட்சகர்களுக்கு அறிவிக்கப்பட்டு, தகவல்களைப் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது தாமதமாகியமையால் அவற்றின் இழப்புகளை மதிப்பீடு செய்து கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேண்டும். | பெற்று, விசாரணைகளை நிறைவு செய்யுமாறு வாகன விபத்துக் குழுவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2011 செப்டெம்பர் 23 ஆந் திகதி விபத்திற்குள்ளான வாகனமொன்று தொடர்பாக நிதிப்பிரமாணங்களின்படி விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமையாலும் வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையாலும் அது முற்றாக இழப்புக்குள்ளாகி கைதவிர்ப்புச் செய்ய வேண்டியேற்பட்டது. இவ்விழப்பைச் சரிவரக் கணிப்பிட்டு கணக்கிலிடுவதற்கும் வாகனம் முற்றாக இழப்பிற்குள்ளாகக் காரணமாகிய உத்தியோகத்தர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளவும் இல்லை. விபத்தின் பின்னர் 2017 ஆம் ஆண்டில் விபத்தையேற்படுத்திய உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 400,000 அறவிடப்பட்டிருந்தபோதும், அத்தொகையானது நட்டமாக கணக்கில் தொடர்ந்து முன் கொண்டு செல்லப்பட்டிருந்தது. | 104 ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ்விபத்து தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர் ரூபா 400,000 செலுத்தியுள்ளதுடன் நட்டத்தைப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |
| (ஈ) | பத்து ஆண்டுகளுக்கு மேலாக உள்ள மொத்த நட்டம் ரூபா 7.07 மில்லியனுடைய 90 வாகன விபத்துக்கள், 5 - 10 ஆண்டுகளாக இருந்து வரும் 28 வாகன விபத்துக்கள் அடங்கலாக 30 நிகழ்வுகளுடன் தொடர்புடைய மொத்த நட்டமாகிய ரூபா 32.46 மில்லியன், 5 ஆண்டுகளுக்கு குறைவாக இருந்து வரும் 62 வாகன விபத்துக்களுடன் தொடர்புடைய ரூபா 13.71 மில்லியன் மொத்த இழப்பு என்பன தொடர்பாக 103(1) ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு அவற்றை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இத்தொகை தொடர்ச்சியாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டவாறிருந்தது. 2018 ஆம் ஆண்டில் ரூபா 2.54 மில்லியன் இழப்பை ஏற்படுத்திய 27 வாகன விபத்துக்கள் சம்பந்தமாகவும் 103(1) ஆம் | 103 ஆம் நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விபத்துக்கள் மற்றும் சொத்து இழப்புகள் சரிவர அறிவிக்கப்படுதல் மற்றும் நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுத்தல் என்பவற்றில் உள்ள நலிவுகள் காரணமாக இழப்புகளையும் நட்டங்களையும் அறவிடுவதற்கு அல்லது மீதிகள் இருப்பின் அவற்றை புத்தங்களிலிருந்து நீக்குவதும் நடைபெற்றிருக்காமையை ஏற்றுக்கொள்ளுகின்றேன். |

நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காவலாளர் பதவிகளுக்கு 1,184 பேரை ஆட்சேர்க்கையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணங்கியவாறு ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஆட்சேர்ப்பு விதிமுறைகளின் கீழ் போட்டிப் பரீட்சை உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வரிசை அமைச்சினது அறிவுறுத்துரைக்கமைய நேர்முகப் பரீட்சையின் மூலம் காவலாளர்களை ஆட்சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்குழு அங்கத்தவர்களுக்குக் கொடுப்பனவுகள், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பனவு, மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மற்றும் நேர வேலைக் கொடுப்பனவு மற்றும் ஏனைய செலவினங்களும் உபசரிப்புச் செலவினம் போன்றவற்றிற்கு ரூபா 4.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் அமைச்சரவைக் குறிப்பு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு இந்த ஆட்சேர்ப்பு இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாகியது. | ஆட்சேர்ப்பு நடைமுறையை முறைப்படி தயாரித்து முறையான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | வரிசை அமைச்சினால் ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை, அமைச்சரவைக் குறிப்பின் மூலம் ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்து போட்டிப் பரீட்சையை உள்ளடக்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டமை என்பன திணைக்களத்திற்கும் அமைச்சிற்கும் இடையேயான மாற்றங்கள் மற்றும் அமைச்சர்கள் மாற்றமடைந்தமையால் ஏற்பட்டதாகும். |
| (ஆ) | நேர்முகப் பரீட்சை அங்கத்தவர்கள் மற்றும் உதவி அலுவலகர்களுக்கான உபசரிப்புச் செலவினத்திற்கு செலவாகிய ரூபா 1.68 மில்லியனும் மேற்படி தொகையில் உள்ளடங்கும். இந்த உபசரிப்புச் செலவினத்திற்கு வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தில் நிதியேற்பாடு செய்யப்படவில்லை. பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 க்கமைய திணைக்களத் தலைவர் ஒருவர் நேரடிக் | அரசாங்கத்தின் நிதி முறையான நிர்வாகத்துடனும் முகாமைத்துவத்துடனும் செலவிடப்பட வேண்டும் | இத்துரித நடவடிக்கைகளுக்கு பொதுத் திறைசேரியின் பூரண அனுமதி பெறப்படுவது தாமதமாயினும், இச்செலவினம் மிகவும் சிக்கனத்துடனும் தேவையான பணிகளுக்கும் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. |

கொள்வனவுக்குச் செலவு செய்யக்கூடிய அதி கூடிய வரம்பு ரூபா 500,000 ஆகும். அவ்வரம்பிற்கு அதிகமாக செலவிடப்பட்டிருந்தது. மேலும், உத்தியோகத்தர்களுக்கு இடைக்காலக் கட்டு நிதியை வழங்கியதன் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட இத்தொகைக்கு திறைசேரியின் பூரண அங்கீகாரம் பெறப்படவில்லை. அதற்கமைய, நிதிப்பிரமாணம் அல்லது வேறு ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படாத இச்செலவினம் அரசாங்க நிதி முகாமைத்துவமும் நிர்வாகமும் இன்றி ஏற்பட்ட செலவினமாக அவதானிக்கப்பட்டது.

### 3.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணிப் பயிற்சிக்காக மீளாய்வாண்டின்போது ரூபா 3.04 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 25 சிறைச்சாலை நிறுவனங்களின் 1831 பேருக்கு எதுவித பயிற்சியும் அளிக்கப்படாமை, 23 சிறைச்சாலை நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு சேவை ஆரம்ப பயிற்சிக்குப் புறம்பான வேறெந்தப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களும் ஏற்படுத்தப்படாமை, அநேக உத்தியோகத்தர்களுக்கு அண்மைய 05 ஆண்டுகளின்போது பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிராத குறைபாடுகள் என்பன அவதானிக்கப்பட்டன. | திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் நிலையத்தின் வளங்கள் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்படுவதன் மூலம் உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு நிறுவன மட்டத்தில் வினைத்திறனும் ஆக்கபூர்வமும் மிக்க சேவையைப் பெறுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் உள்ளூர் பயிற்சிக்கு ரூபா 5 மில்லியனான ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே, தீவடங்கிலும் உள்ள நிறுவன உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சியும் கற்கை நெறிகள் தொடர்பான தகவல்களும் அடங்கிய விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | சிறைச்சாலைகள் நிறுவனங்கள் சமர்ப்பித்த தகவல்களுக்கமைய பயிற்சி பெறாதபோதும் தமது கடமைகளை நிறைவேற்றும் பதவியணியினரது செயலாற்றலை அதிகரிக்கும் நோக்குடன் சுடுகலன்கள், முதல் உதவிச் சிகிச்சை, தீயணைப்பு, மனிதவள முகாமைத்துவம், மனநல முகாமைத்துவம், மனித உரிமைகள், கணனி, இரண்டாவது மொழி, அலுவலக முறைமை மற்றும் | பதவியணியினரின் செயலாற்றலை அதிகரிப்பதற்குத் தேவையான பயிற்சி வழங்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் உள்ளூர் பயிற்சிக்கு ரூபா 5 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே, தீவடங்கிலும் உள்ள நிறுவன உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சியும் கற்கை நெறிகள் தொடர்பான தகவல்களும் அடங்கிய விண்ணப்பப் படிவங்களும் |

| | | |
|---|---|---|
| சட்டங்களும் விதிகளும் பிரமாணங்களும் ஆகிய பயிற்சிகளுக்கான தேவைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | | வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) குறுவிட்ட சிறைச்சாலையினதும் குறுவிட்ட பிரதேச சபையினதும் இணக்கத்துடனும் ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமையால் உடன்படிக்கைக்கு முரணாக குறுவிட்ட பிரதேச சபை சிறைச்சாலை காவலர் ஒருவருக்கு ரூபா 120,000 வழங்கியிருந்தது. குறுவிட்ட பிரதேச சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 336,907 அறவிடப்படுவதற்கான நடவடிக்கையை குறுவிட்ட சிறைச்சாலை இது வரை மேற்கொள்ளவில்லை. | ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கைக்கு முரணாக மேற்பார்வைக் கட்டணமாக ரூபா 10,000 வீதம் ஆண்டொன்றிற்கு ரூபா 120,000 குறுவிட்ட பிரதேச சபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு உரித்தாக வேண்டிய தொகை சம்பந்தமாக பிரதேச சபையின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குறுவிட்ட சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வில் அவதானிக்கப்பட்டவாறு சிறைச்சாலை அத்தியட்சகரின் எழுத்துமூல பணிப்பினடிப்படையில் மாதாந்தம் ஆறேழு தடவைகள் சிறைச்சாலை வார்ட்கள் பரிசீலிக்கப்பட்டிருந்தபோதும், பல்வேறு உபாயங்களை பயன்படுத்தி சிம்காட், கையடக்கத் தொலைபேசி, புகையிலை, பெட்டரி, போதைப்பொருள் போன்ற சட்டவிரோத பொருட்கள் சிறைச்சாலைக்குள் கொண்டுவரப்படுவது அறிவிக்கப்பட்டிருந்தது. குறித்த பரிசீலனை அறிக்கையின் விபரம் பதிவு செய்யப்படாமையால் எவ்வளவு அத்து மீறிய பொருட்கள் இனங்காணப்பட்டன என்றும் எந்த | கிரமமான நடைமுறைகளின் அடிப்படையில் தடை செய்யப்பட்டுள்ள பொருட்களைப் பரிசீலிப்பது தொடர்பாக பதிவு மேற்கொள்ளப்பட்டு கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் நபர்கள் தொடர்பான எழுத்துமூல சான்று பேணப்பட வேண்டும். | கைப்பற்றப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ள பொருட்களைப் பரிசீலிக்கும் பதிவேடொன்றைப் பேணுமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது என்றும் அறிக்கைகள் நிறுவனத்திடம் இல்லாததால் நலிவாக உள்ள உள்ளகக் கட்டுப்பாட்டை நவீன தொழில்நுட்பத்தினூடாக முன்னேற்றுவதற்கான தேவை இருப்பது அவதானிக்கப்பட்டது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவியணியில் 2138 வெற்றிடங்கள் நிலவுவதால் சிறைச்சாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாக நடாத்தப்படுவது தாமதமாகியுள்ளதுடன் அநேக சிறைச்சாலை நிறுவனங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்கள் இரண்டு அல்லது மூன்று பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு நிறுவனங்களின் கணக்கீட்டு நடவடிக்கைகள் முறையாகவும் கிரமமாகவும் நடாத்தப்படுவதில் வசதியின்மை நிலவுதலும், சிறைச்சாலை நிறுவனங்களில் அலுவலக நடவடிக்கைகளை கிரமமாகப் பேணுவது வசதியின்மை (கடித நடவடிக்கைகள் / உத்தியோகத்தர்களின் பெயர் வழிக் கோவை நடவடிக்கைகள்) ஏற்படுவதும் உத்தியோகத்தர்களின் கடமை நெருக்கடி காரணமாக அநேக உத்தியோகத்தர்கள் மன அழுத்தங்களுக்கு உள்ளாவதும், உள்ளக இடமாற்றங்களின்போது சிக்கல்கள் உருவாகுவதும் சிறைச்சாலைக் கைதிகளின் மேற்பார்வைக்கான உத்தியோகத்தர் பற்றாக்குறையும் அதன் காரணமாக சிறைச்சாலைகளில் பல்வேறு குறைபாடுகள், ஊழல்கள் ஏற்படுவதும் பாதுகாப்பிற்குப் போதிய உத்தியோகத்தர்கள் இல்லாமையால் சிறைக் கைதிகள் தப்பிச் செல்வதும் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியும் கற்கை நெறிகளும் வழங்கப்படுவதில் இடர்கள் நிலவுவதும் போன்ற குறைபாடுகளால் திணைக்கள நடவடிக்கைகளை வினைத்திறனுடனும் தடையின்றியும் நிறைவேற்ற முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ உயர் மட்டம் குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதுடன், சிக்கல்கள், தடைகள் என்பவற்றை குறைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |